Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

MONDAY, FEBRUARY 14, 2022

திங்கட்கிழமை ஏப்ரல் 14, 2022 | ஒளி: 07 கதிர் 231 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



பயங்கரவாதத் தடை திருத்த

## சட்ட மூலம் விவாதத்துக்கு விரைவில் வருகிறது

பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தின் சமீபத்திய ஒழுங்குப் பத்திரத்திலும் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இந்த சட்ட மூலம் விரைவில் சபையில் விவாதிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

சுகாதார சங்கத்தின் கருத்துக்களால்

## ஆசிரியர்கள் அதிருப்தி

சில சுகாதாரத் துறை தொழிற்சங்கத் தலைவர்கள் தமது வேலை நிறுத்தத்தின் போது ஆசிரியர் சங்கங்கள் தொடர்பில் வெளியிட்ட அறிக்கைகளை தாம் கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

நாட்டின் நலனுக்கு

## "உழைக்காதவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்"



"எந்த அரசியல்வாதியும் நாட்டின் நலனுக்காக உழைக்கவில்லை என்றால், மக்கள் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## இளம் எம்.பி உட்பட 200 பேர் இசை விருந்து

### போதைப் பொருளுடன் 7 பேர் சிக்கினர்

அனுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் பாராளுமன்ற உறுப்பினர், வைத்தியர் மற்றும் இருநூறு பேர் 'டிஜே இசை விருந்தில்' கலந்துகொண்டதாகவும், அதில் ஏழு பேர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதாக அனுராதபுரம் பிரதேச குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



ஊ.சே.நி, ஊ.ந.நி, ஆகியவற்றை கொள்ளையிடும் அரசாங்கத்தின்

# ஆட்சி நீடிக்க வேண்டுமா?

உங்களின் ஊழியர் சேமலாப நிதியையும் (ஊ.சே.நி) ஊழியர் நம்பிக்கை நிதியையும் (ஊ.ந.நி) கொள்ளையடிக்க முயலும் அரசாங்கம் இன்னும் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டுமா என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பினார்.

உடுதும்பர, ஹசலக்கவில் நேற்றுக் (13) காலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின்

## விமானிகள் மன்றமும் தொழிற்சங்க நடவடிக்கை

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்தின் விமானிகள் மன்றம் 'நேரத்துக்கு மட்டும் வேலை' தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வை வழங்க ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகம் தவறிவிட்டதாகவும் அதனால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நேரிட்டதாகவும் மன்றத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மக்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை



"பெரும்போகத்தின் இறுதிக்குள், தேவையான உரத் தொகுதிகளை அரசாங்கம் வழங்க வேண்டும் என்பதே இலங்கையிலுள்ள முழு விவசாய சமூகத்தினதும் ஒரே எதிர்பார்ப்பு" என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி P2

புதிய திட்டங்கள் மூலம்

## தரகுப் பணத்தை பெற முயல்கிறது அரசாங்கம்

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் மூலம் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களையும் மற்றும் தரகுப் பணத்தைப் பெறுவதிலும் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியது.




தொடர்ச்சி P2

## அடுத்த பெப்ரவரிக்கு முன்னர் தேர்தல்

### 69 இலட்சம் 79ஆக அதிகரிக்கும் என ஆரூடம்



"அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும்" என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெற்ற 6.9 மில்லியன் வாக்குகள்,

தொடர்ச்சி P2



## கேரள கஞ்சாவுடன் கப்பல் துறையில் ஒருவர் கைது

திருகோணமலை, கப்பல் துறை பகுதியில் வைத்து 1 கிலோ 600 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சீனக் குடா பொலிஸார் தெரிவித்தனர்.


தொடர்ச்சி P2

# கவனமாக இருங்கள்

கவனமாக இருக்குமாறு எச்சரித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியை எதிர்ப்பார்ப்பதாகவும் எதிர்வு கூறியுள்ளது.

சப்ரகமுவ, மத்திய ஊடாக மற்றும் வட,மத்திய மாகாணங்களிலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியை எதிர்ப்பார்க்கலாம் என எதிர்வு கூறியுள்ளது.

தொடர்ச்சி P2






இலங்கை எல்லைக்குள் நுழைந்த

## இராமேஸ்வர மீனவர்கள் 12 பேருக்கும் 25 வரை விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர், 25 ஆம் திகதி வரை கிளிநொச்சி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்படவுள்ளனர்.

மீனவர்களின் 2 ட்ரோலர் படகுகளும் நேற்று முன்தினம் இரவு (12) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## சமுர்த்தி மேலதிக கொடுப்பனவு 28%ஆல் அதிகரிப்பு

சமுர்த்தி பயனாளர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி மேலதிக கொடுப்பனவை இன்று (14) முதல் 28 சதவீதமாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அடுத்த அமைச்சரவையில்

## எரிபொருள் விலைச் சூத்திரம் சமர்ப்பிக்கப்படும்



"எரிபொருள் விலை சூத்திரம் வரைவு செய்யப்பட்டுள்ளதாகவும், அது அடுத்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்" எனவும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சம்பளப் பட்டியலை வெளியிட்டால் பதிலடி

### கெஹலியவுக்கு பி.எச்.ஐ எச்சரிக்கை



"தாதியர்கள், இடை மற்றும் துணை மருத்துவ சேவை வழங்குநர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளை சுகாதார அமைச்சர் வெளியிட முன்வந்தால், சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் சம்பளப் பட்டியலை வெளியிடுவோம்" என்று பொது சுகாதார பரிசோதகர்கள் (பிஎச்ஐ) சங்கம் எச்சரித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சட்டமூலம் விவாதத்துக்கு விரைவில் வருகிறது

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த 11ஆம் திகதி பயங்கரவாத தடை திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், இந்த புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் ஒருவரைத் தடுத்து வைக்கும் காலம் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக குறைக்கப்படவுள்ளது.

இதேவேளை, புதிய திருத்த சட்டத்தின் கீழ் கைதிகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக தடுப்புக்காவல் மையங்களுக்குச் சென்று விசாரிக்க நீதவானுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஒரு வழக்கறிஞர் தடுப்பு மையத்துக்குச் செல்வதற்கும், கைதிகள் தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் புதிய திருத்தச் சட்டம் வாய்ப்பளிக்கிறது.

சந்தேகநபர்கள் சித்திரவதைக்கு உள்ளாவதை உறுதிப்படுத்துவதற்கு சாசனத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்துவதற்கான வாய்ப்பையும் புதிய திருத்தம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சி நீடிக்க வேண்டுமா?

அங்கு மேலும் தெரிவித்த அவர், இலங்கை இதுவரை நிதி உதவி கோரவில்லை என சர்வதேச நாணய நிதியம் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளதாகவும் எனினும் நாணய நிதித்திடம் அரசாங்கம் பேசியதாக கூறப்படுகிறது என்பதும், இதில் உண்மையைச் சொல்வது யார் என்பது குறித்து நாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொய்யினாலேயே இந்த அரசாங்கம் தனது இருப்பை பாதுகாத்து கொள்கின்றது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்களை ஏமாற்றுவதே அவர்களின் அவ்வப்போதைய நிகழ்ச்சி நிரல் எனவும் தெரிவித்தார்.

சீனியின்றி தேனீர் அருந்துவோம், மிளகாயின்றி ரசம் பருகுவோம், புல்லையேனும் நாம் உண்போம் என்று வரலாற்றில் சிலர் கூறியதாகவும் நினைவூட்டினார்.

அன்று போலவே இன்றும் பசளையின்றி விளைச்சல் பெறுவோம், நெல்லின்றிசோறு சாப்பிடுவோம், மின்சாரமின்றி நாம் வாழ்வோம் என்று பொறுமையுடன் மக்கள் இன்று வாழ்வார்கள் என அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது போலவும் என்றும் குறிப்பிட்டார்.

உங்களுக்கு உரம் தராத அரசாங்கம் இன்னும் ஆட்சியை தொடரவேண்டுமா? ஒவ்வொரு வீட்டுக்கும் கேஸ் குண்டைக் கொடுத்த அரசாங்கம் இன்னும் தொடர வேண்டுமா? நாடுமுழுவதும் மக்கள் வரிசையில் நிற்கும் நிலையிக்கு இந்நாட்டை உருவாக்கிய அரசாங்கம் இன்னும் தொடரவேண்டுமா? என்று கேள்வியெழுப்பினார்.

மேலும், உங்களின் ஊழியர் சேமலாப நிதியையும் ஊழியர் நம்பிக்கை நிதியையும் கொள்ளையடிக்க முயற்சிக்கும் அரசாங்கம் இன்னும் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டுமா? ஆட்சிக்கு வந்த உடனயே பணக்கார குபேரர்களுக்கு வரிச்சலுகை அளித்துநாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த இந்த கொடூர அரசாங்கம் இன்னும் தொடர வேண்டுமா? என்றும் கேள்வியெழுப்பினார்.

கொரோனாவில் 15,000 க்கும் மேற்பட்ட உயிர்களை பலிகொடுக்கும் வரை கட்டுக்கதைகளின் பிரகாரம் பணியாற்றியஅரசாங்கம் இன்னும் ஆட்சியில் தொடர வேண்டுமா? என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது கேள்விஎழுப்பினார்.

கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே இந்த அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும் எனவும், அதன் பின்னர் அடுத்த தலைமுறையின் பிரச்சினைகளுக்கு விடை தேடும், திறமை, ஆற்றல் மற்றும் இயலுமைக்கு இடமளிக்கும் அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், இதனை மேற்கொள்ள தற்போதுள்ள மாற்று சக்தி ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே எனவும் தெரிவித்தார்.

## கவனமாக இருங்கள்

சில பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கமுடியும். கடும் காற்று வீசவதுடன், இடி, மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் விபரீதங்களில் இருந்து காப்பாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறும், மிக மிக அவதானமாக இருக்குமாறும் மக்களிடத்தில் கேட்டுக்கொண்டுள்ளது.

## இராமேஸ்வர மீனவர்கள் 12 பேருக்கு 25 வரை விளக்கமறியல்

கைது செய்யப்பட்ட மீனவர்களை படகுகளுடன், சட்ட நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட பிரிவில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் 12 பேரும் இராமேஸ்வரத்தை சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## ஆசிரியர்கள் அதிருப்தி

ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள புரிதலை இவ்வாறான அறிக்கைகள் காட்டுவதாக ஒன்றியத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் தீர்வுகளை வழங்க முடியாவிட்டால், எந்தவோர் ஊழியருக்கும் அல்லது தொழிற்சங்கத்துக்கும் நீதிக்காக போராட உரிமை உண்டு என்றார்.

120 நாட்களுக்கு தொழிற்சங்க வேலைநிறுத்தம் நடத்துவது எளிதல்ல என்பதை நினைவுகூர்ந்த அவர், ஆசிரியர் போராட்டம் குறித்து மற்ற தொழிற்சங்கங்கள் அறிக்கை விடுவது நல்ல அறிகுறி அல்ல என்றும் தெரிவித்தார்.

சுகாதாரத் துறை தொழிற்சங்கங்கள் தங்கள் போராட்டங்களைத் தெரிவுசெய்து அமைதியான முறையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

## விமானிகள் மன்றமும் தொழிற்சங்க நடவடிக்கை

அதற்கமைய, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விமானிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விமானக் கடமைகளை அவர்களின் விமான அட்டவணைக்கு அமைய மட்டுமே செய்வார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த விடுமுறை மற்றும் பொது விடுமுறை நாட்களில் விமானிகள் கடமைகளைச் செய்யமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களை ஒழுங்காக இயக்குவதற்கு போதுமான விமானிகளை நியமிக்கவில்லை என்றும் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

எனவே, விமானிகள் பற்றாக்குறையை நிரப்புவதற்காக வருடாந்த விடுமுறை மற்றும் பிற விடுமுறை நாட்களில் கூட எந்தவித தயக்கமும் இல்லாமல் இதுவரை கடமைக்கு சமுகமளித்துள்ளனர்.

தற்போது அதிகரித்துள்ள பயணிகளின் வருகையால் விமான நிறுவனம் இலாபம் ஈட்டி வரும் நிலையில், விமானிகளின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வை வழங்காதமையை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகம் நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

விமானிகளின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்காத வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என சிரேஷ்ட பேச்சாளர் மீண்டும் வலியுறுத்தினார்.

## சமுர்த்தி மேலதிக கொடுப்பனவு 28%ஆல் அதிகரிப்பு

அனுராதபுரத்தில் நேற்று (13) ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் 17 இலட்சத்து 67 ஆயிரம் குடும்பங்கள் சமுர்த்தி கொடுப்பனவை பெறுகின்றன. இவர்களுக்காக சமுர்த்தி மேலதிக கொடுப்பனவை 28 சதவீதமாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றார்.

அதற்கமைய, இதுவரையில் வழங்கப்பட்ட 3,500 ரூபாய் மேலதிக கொடுப்பனவு பெற்ற குடும்பங்களுக்கான கொடுப்பனவு 4, 500 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதுவரையில் 2, 500 ரூபாய் மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொண்ட குடும்பமொன்றுக்கு 3,200 மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் 1,500 ரூபாய் பெற்ற குடும்பத்துக்கு 1,900 ரூபாய் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## உழைக்காதவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்

தவறான நபர்களின் பொய்களை நம்பி அவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியதற்கு இந்த நாட்டு மக்களே தவிர வேறு யாரும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற ஆட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பொய்களை நம்பி, தவறான நபர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியதற்காக மக்களைக் குறை கூற வேண்டும். வாக்குகளுக்கு ஈடாக மக்களுக்கு சிறு சிறு பொருட்களை கொடுக்கின்றனர். அடுத்த 5 ஆண்டுகளுக்கு மக்கள் அவதிப்படுகின்றனர் என்றார்.

இதை மாற்ற ஒரே வழி மக்களே எனவும் எந்த அரசியல்வாதியும் நாட்டின் நலனுக்காக உழைக்கவில்லை என்றால், மக்கள் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டார்.

## மக்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை

கின்ஸ் நெல்சன், மக்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) காலை இடம்பெற்ற ஊடகங்கவியலாளர் மாநாட்டிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்த அவர், கடந்த காலங்களில் நெற்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட விதைகளுக்கு, சேதன உரங்களைப் பயன்படுத்துவதானது, இரசாயன உரத்தைப் பயன்படுத்தப்படுவதை விட வேறுபட்டது என்று அவர் குறிப்பிட்டார். விவசாய அமைச்சரும் அரசாங்கமும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி அழித்து வருவதாக குற்றம் சுமத்தினார்.

## தரகுப் பணத்தை பெற முயல்கிறது அரசாங்கம்

நேற்று (13) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக முன்மொழியப்பட்ட '100,000 திட்டங்கள்' கிராம அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் சீமெந்து தட்டுப்பாட்டைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கிராம அபிவிருத்தி திட்டத்தில் அத்தியாவசிய பாலங்கள் அல்லது கட்டடங்களை நிர்மாணிப்பது உள்ளடக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலதிக கட்டண வரிச் சட்டமூலத்தின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது 25 சதவீத வரியை விதித்ததன் மூலம் குறிப்பிட்ட திட்டத்துக்கு அரசாங்கம் நிதியளிக்க முயல்வதாக கூறினார்.

சீமெந்து தட்டுப்பாடு காரணமாக கட்டுமான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளதாகவும் சீமெந்து தட்டுப்பாடு காரணமாக கட்டுமானங்களுக்கு பதிலாக '100,000 திட்டங்களை' அரசாங்கம் முன்மொழிகிறதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## எரிபொருள் விலைச் சூத்திரம் சமர்ப்பிக்கப்படும்



உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு காரணமாக எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதியமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் எரிபொருள் விலையை உலக சந்தையின் விலையை பிரதிபலிக்கும் வகையில் திருத்தம் செய்யாவிட்டால் ஏழைகள் சுமையை சுமக்க நேரிடும் என்பதால், உடனடியாக ஒரு சூத்திரம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஏற்கெனவே அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இளம் எம்.பி உட்பட 200 பேர் இசை விருந்து

அனுராதபுரம், தஹயியாகம பிரதேசத்திலுள்ள சொகுசு ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற டிஜே இசை விருந்து ஒன்லைனில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் 4,000 ரூபாய் பெறுமதியான போதை முத்திரைகள், 4,500 ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் மற்றும் கேரள கஞ்சா ஆகியவை இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சமூக வலைதளங்களில் செய்யப்பட்ட விளம்பரத்துக்கமைய இந்த விருந்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 20 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட 200க்கும் மேற்பட்ட இளைஞர், யுகதிகள் கலந்து கொண்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## அடுத்த பெப்ரவரிக்கு முன்னர் தேர்தல்

அடுத்த தேர்தலில் 7.9 மில்லியனாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று (13) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் வெற்றி பெறுவதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாக நம்பிக்கை தெரிவித்த அவர், 2018ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றிகொண்டு பெரும்பான்மையை நினைவு கூர்ந்தார்.

பொதுமக்களின் சுமையை குறைக்கும் வகையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையை குறைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்றும் உறுதியளித்தார்.

ஊழியர் சேமலாப நிதி மேலதிக கட்டணம் சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாதகமான சரத்துகளை திருத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதி மாத்திரமின்றி, பல வணிகங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களும் புதிய வரிக்கு உட்படுத்தப்படும் என்றார்.

## கேரள கஞ்சாவுடன் கப்பல் துறையில் ஒருவர் கைது

சுந்தளாய் சூரியபுர விசேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு (12) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை கப்பல் துறை பகுதியைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சம்பளப் பட்டியலை வெளியிட்டால் பதிலடி



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும்மேலதிக செயலாளர்களின் சம்பளப் பட்டியல் ஆகியவற்றையே வெளியிடவுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தொழிற்சங்க தலைவர் உபுல் ரோஹண மேலும் தெரிவிக்கையில்,இவ்வாறான அதிகாரிகள் நாளொன்றுக்கு எவ்வளவு சம்பாதிக்கிறார்கள், தரைமட்ட ஊழியர்கள் ஒரு மாதத்துக்கு எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்பது பொதுமக்களுக்கு தெளிவாகத் தெரியவரும் என்றார்.

கொரோனா தொற்றின் ஆரம்பக் கட்டங்களில் கடமையில் இருந்த அதிகாரிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு அல்லது பாதுகாப்பு உபகரணங்களை வழங்க சுகாதார அமைச்சினால் முடியவில்லை என்று அவர் குற்றம் சுமத்தினார்.

உயர் பதவிகளிலுள்ள அதிகாரிகளுக்கு, அடிமட்ட ஊழியர்கள் அன்றாடம் மேற்கொள்ளும் போராட்டங்கள் தெரியாது எனவும் மேலதிக நேரத்துக்கான அவர்களின் கோரிக்கை சுகாதார அமைச்சினால் புறக்கணிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

## கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின்

# 40 வருடங்கள் நிறைவு



பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர, கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்



முன்னாள் துணைவேந்தரும் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்



ரஜீவ் அமரசூரிய, தலைவர்

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கம், 1982ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 2022 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியுடன் 40 வருடங்களை நிறைவு செய்கிறது.**

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கமானது, கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு முறைப்படுத்தப்பட்ட பழைய மாணவர்களின் உடலமைப்பு இன்றியமையாதது என நம்பிய அன்றைய துணைவேந்தரான பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தரவின் விசேட முயற்சியாகும்.**

பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தரவின் இந்த பழைய மாணவர் அமைப்பு வலுவாகவும், எல்லையற்ற எதிர்காலத்துக்காக பல்கலைக்கழகத்துடன் நெருக்கமாகவும் இணைந்திருப்பதைக் காணும் ஆர்வத்தின் அடிப்படையில், துணைவேந்தரை சங்கத்தின் முன்னாள் உத்தியோகபூர்வ தலைவராக சேர்க்க வேண்டும் என்பது பேராசிரியர் விஜேசுந்தரவின் கருத்தாகும்.

முன்னாள் மாணவர் சங்கத்தின் முதன்மைத் திட்டமானது, கொழும்பு 7, புல்லர்ஸ் லேனில், பெண் இளங்கலைப் பட்டதாரிகளுக்கான (4) நான்கு அடுக்கு விடுதி வளாகத்தை நிர்மாணித்து, 1996ஆம் ஆண்டு அப்போதைய சங்கத்தின் தலைவர் மறைந்த திருமதி சுஜாதா ஜெயவர்தனவால் அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மணிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரே நேரத்தில் 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கும் இந்த விடுதி வளாகம் 25 ஆண்டுகளுக்கும் மேலாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் சேவையாற்றி வருகிறது.

பழைய மாணவர் சங்கம் தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்துக்காக 50 மீற்றர் நிபுணத்துவ நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கும் பணியை முன்னெடுத்துள்ளதுடன் விரிவான கட்டடக்கலைத் திட்டங்களை அண்மையில் பெற்றுக்கொண்டதன் மூலம் எதிர்வரும் காலங்களில் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த மகத்தான திட்டங்களுக்கு மேலதிகமாக, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கம் பழைய மாணவர்கள், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் அதன் மாணவர் மக்களுக்கு இடையே ஒரு முக்கிய வழித்தடமாக செயல்படுகிறது மற்றும் கடந்த 40 ஆண்டுகளில் இந்த பங்குதாரர்களுக்கு அளவிட முடியாத சேவையை செய்துள்ளது. மற்றத் திட்டங்களில் Friend and Guide திட்டங்கள், உதவித்தொகை வழங்குதல், தொழில்முறை மேம்பாட்டு திட்டங்கள், மொழி திட்டங்கள்; சுஜாதா ஜயவர்தன நினைவு சொற்பொழிவு, கொழும்பு பல்கலைக்கழக புத்தக நிலையத்தின் செயல்பாடு மற்றும் பிற வலையமைப்பு, தொழில்சார் மற்றும் கல்வி வளர்ச்சி நிகழ்வுகள் போன்ற வருடாந்த நிகழ்வுகள்.

முன்னாள் மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர்களாக திஸ்ஸ தேவேந்திரா, திருமதி சுஜாதா ஜயவர்தன, யோகேந்திர துரைசுவாமி, கலாநிதி டட்லி குணசேகர, ஜே.சரித ரத்வத்த, திலக் கருணாரத்ன, திருமதி.ரமணி அமரசூரிய, P.W. சேனாரத்ன மற்றும் லக்ஷ்மன் கீர்த்திசிங்க மற்றும் தற்போது, ரஜீவ் அமரசூரிய ஆகியோர் ஜனாதிபதியாக உள்ளனர்.

40வது ஆண்டு நிறைவு விழாவின் முதல் நிகழ்வாக, பழைய மாணவர் சங்கத்தின் புதிய இணையத்தளம் மற்றும் அங்கத்துவ போர்டல் அறிமுகம், 15 பெப்ரவரி 2022 செவ்வாய்க் கிழமை, கொழும்பு கல்லூரி இல்லப் பல்கலைக்கழகத்தில், பிரதம அதிதியாக, முன்னாள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தரும் தற்போது வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் வருகை தருவார்.

அனைத்துப் பட்டதாரிகள், முதுகலை பட்டதாரிகள் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்த அனைவரும் சங்கத்தின் இணை உறுப்பினர்களாக உள்ளனர், மேலும் வரும் செவ்வாய்கிழமை தொடங்கப்படும் உறுப்பினர் போர்ட்டலில் தங்கள் தகவல்களை புதுப்பித்துக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## இரட்டை மேம்பாலங்களின் பணிகள்

# திட்டமிட்டபடி நிறைவு செய்யப்படும்



கொழும்பை அண்டிய பகுதிகளில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தையின் நிர்மாணக்கப்படும் இரட்டை மேம்பாலங்களின் முதலாம் கட்டப் பணிகள் திட்டமிடப்பட்ட காலத்துக்குள் நிறைவு செய்யப்படும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இரட்டை மேம்பாலங்களின் மேற்பகுதியின் பணியை நிறைவு செய்வதற்குத் தேவையான கொங்றீட் கட்டமைப்புகளை எடுத்துச் செல்லும் பணி, நேற்று (13) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த இரட்டை மேம்பாலப் பணிகளை, இவ்வருடம் ஜூன் மாதம் நிறைவு செய்வதற்காக 24 மணித்தியாலங்களும் உழைக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கின் பிரகாரம், அபிவிருத்திக்கான பாதையில் நிலையான நாட்டை முன்னேற்றுவதற்கு நிலையான வீதி வசதிகளை மக்களுக்கு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே, துரித அபிவிருத்தித் திட்டமாக கொழும்பு புறநகர் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் இரட்டை மேம்பாலத்தின் முதலாவது கட்டமான நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தையின் நிர்மாணப் பணிகள் திட்டமிட்ட திகதியில் நிறைவு செய்யப்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

நீதிபதி அக்பர் மாவத்தையில் உள்ள மேம்பாலம் 207 மீட்டர் நீளமும் 8.4 மீட்டர் அகலமும் கொண்டது. உத்தரானந்த மாவத்தையில் உள்ள மேம்பாலம் 396 மீட்டர் நீளம் கொண்டது. இதன் அகலம் 10.4 மீட்டர்களாகும். இரண்டு மேம்பாலங்களையும் இணைக்கும் வகையில் அமைக்கப்படும் மேம்பாலத்தின் நீளம் 310 மீட்டர்களாகும். இதன் அகலம் 6.9 மீட்டர். இதற்கு 5,270 மில்லியன் ரூபாய் செலவிடப்படுகின்றது.

## எரிபொருள்களின்

# விலை அதிகரிப்பு தொடர்பில் தகவல்



எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில், இதுவரையில் எந்தவொரு தீர்மானம் மேற்கொள்ளவோ அல்லது பேச்சுவார்த்தை நடத்தவோ எண்ணமில்லை என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனம், தற்போது டீசல் ஒரு லீற்றருக்காக 50 ரூபாய் நட்டத்தையும், பெற்றோல் ஒரு லீற்றருக்காக 16 ரூபாய் நட்டத்தையும் எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக, இன்று திங்கட்கிழமை (14) எரிபொருள்களை விலைகளை அதிகரிப்பதற்கான யோசனையை, விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு, கடந்த 7ஆம் திகதி கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கும், உக்ரேனுக்கும் இடையிலான பதற்ற நிலை மற்றும் அமெரிக்க மத்திய பரிவர்த்தனையின் மூலம், வட்டி வீதம் அதிகரிக்கும் போக்கு என்பன காரணமாக, உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் மேலும் அதிகரித்துள்ளன.

இதன்படி, ப்ரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை, 3.3 சதவீதத்தால் அதிகரித்து, 94 தசம் 44 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. அமெரிக்க டபிள்யு.டி.ஐ எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை, 3.6 சதவீதத்தால் அதிகரித்து, 93 தசம் 10 டொலராக பதிவாகியுள்ளது.

இதற்கமைய, எரிபொருள்களின் விலைகள் இந்த ஆண்டில், 20 சதவீதத்துக்கும் அதிகளவில் விலை உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின்

# பட்டிருப்புத் தொகுதிக்கு அமைப்பாளர் நியமனம்

வ.சக்தி

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குரிய அமைப்பாளராக முன்னாள் பிரதி அமைச்சர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவினால் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.



# வீடற்றோருக்கு வீடு நிர்மாணம்

ரஸீன் ரஸ்மின்

புத்தளம், செம்மாந்திடல் பகுதியில் வசிக்கும் வீடற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பம் ஒன்றுக்கு புதிய வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் “மிகுந்து நிவஹன” எனும் அரசாங்கத்தின் வீடற்றோருக்கான புதிய வீடு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், குறித்த பயனாளிக்கு புதிய வீடு நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளது.

இந்தப் புதிய வீட்டை நிர்மாணிப்பதற்காக கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சால் 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, குறித்த வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டிவைத்தார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவிடம் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் விடுத்த விசேட வேண்டுகோளுக்கு இணங்க, புத்தளம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் வீடற்ற குடும்பங்களுக்கு கட்டம் கட்டமாக குறித்த திட்டத்தின் கீழ், வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கடற்படைத் தளபதியின் விஜயம்...



வட மத்திய கடற்படைக் கட்டளைக்கு, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகெதென்ன, நேற்று முன்தினம் (12) உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார். (படங்கள் – கடற்படை ஊடகப்பிரிவு)


## பாடசாலை மாணவர்களுக்கு

# வெளிநாட்டு மொழிகளை கற்பிக்க விசேட திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கு 10 வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ்,




ஆங்கிலம், அரபு மற்றும் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளுடன், பிரான்ஸ், ஸ்பெய்ன், ஜேர்மன், இத்தாலி, சீன மற்றும் ஜப்பான் முதலான நாடுகளின் மொழிகளைக் கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு ஏற்படுவதாக இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இணையவழி முறைமையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, கூட்டாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டம் தொடர்பில், நாடுமுழுவதுமுள்ள பாடசாலைகளின் அதிபர்களைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரிய வகை கழுகு மீட்பு

ரஸீன் ரஸ்மின்

அரிய வகை வெள்ளை நிறக் கழுகு ஒன்றை , சட்டவிரோதமான முறையில் வளர்த்து வந்த நபரொருவர், புத்தளத்தில் நேற்று முன்தினம் (12) கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், பாலாவி இரண்டாம் கட்டை பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் ஒன்றின், குறித்த வீட்டில் சோதனை செய்த போதே, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து HALIEETUS LEUCOGWTER (WHITE BELLIED SEA EAGLE) இனத்தைச் சேர்ந்த அரிய வகை வெள்ளை நிறக் கழுகு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு நாள்களாக

# கிழக்கில் கன மழை





■ ஹஸ்பர், எஸ்.எஸ்.குமார் கதிரவன், தீஷான் அஹமட், எம்.எஸ்.எம்.நூர்தீன்

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரு நாள்களாக கனத்த மழை பெய்து வருகின்றது. இதனால் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் தாழ் நிலங்கள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா, தம்பலகாமம், பாலம்போட்டாறு பத்தினிபுரம் உட்பட பல கிராமங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் இரண்டு அடிக்கும் மேலாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தம்பலகாமம் கடவாணை அணைக்கட்டின் மேலாக வெள்ளநீர் வடிந்தோடுகிறது.

நாளாந்த தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளதுடன், வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சமையலறை, வீட்டுத்தளபாடங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு முறையும் மழை காலத்தில் ஜின்னா நகர் பகுதி வெள்ளத்தில் மூழ்குவதாகவும் இது விடயமாக அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் பல தடவைகள் முறையிட்டும் வடிகான் வசதிகளை செய்துதருமாறு கோரிக்கை விடுத்தும் அவர்கள் இதுவரை கவனத்தில் கொள்ளவில்லை என ஜின்னா நகர் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகனேரி 116.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அத்துடன், நவகிரியில் 29.0 மில்லிமீற்றரும் தும்பங்கேணியில் 43.0 மில்லிமீற்றரும் பாசிக்குடாவில் 108.5 மில்லிமீற்றரும் உன்னிச்சையில் 39.0 மில்லிமீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை, அம்பாறையில் 19.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.



## இடிந்து விழுந்த வீடு

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற பலத்த மழை காரணமாக மாஞ்சோலை சேனையில் வீடொன்று, நேற்று (13) காலை இடிந்து விழுந்துள்ளது.

இதன்போது வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, இந்த அனர்த்தம் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேசத்தில் தொடர்மழையால் தாழ் நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பெரும்போகம் பாதிப்பு

■ எம்.எஸ்.எம்.ஹனீபா, அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக, மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட பெரும்போக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இறக்காமம், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை மற்றும் நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் அறுவடை செய்யப்படவிருந்த சுமார் 3,000க்கும் மேற்பட்ட ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வேளாண்மைகள் நிலத்தில் விழுந்துள்ளதால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் அறுவடை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



உயர்ஸ்தானிகராலயத்துக்கு

## பிள்ளையான் எம்.பி விசேட விஜயம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றது.

சந்திரகாந்தன் எம்.பி, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உதவி ஆணையாளர் வினோத் கே ஜேக்கப் , இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக ஆலோசகர் வைத்தியகலாநிதி ராகேஷ் பாண்டே, அரசியல் செயலாளர் பாஸ்டியன் என் சாக்கோ ஆகியோருக்கிடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் தான் முதலமைச்சராக இருந்த காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் இந்திய அரசுடன் இணைந்து முன்னெடுத்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் மக்கள் நலன்சார் விடயங்கள் தொடர்பிலும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.



விசேடமாக கிழக்கு மாகாணத்தின் துரித அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார திட்டங்களை ஒழுங்கு செய்து வழங்குவது தொடர்பிலும், ஆடைத் தொழிற்சாலைகளை அமைத்தல் மற்றும் அதற்கான வர்ணநூல் உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்தல் தொடர்பிலும் அதனூடாக அதிகளவான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

மேலும், முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த வீடுகள் அற்றோருக்கான வீட்டுத் திட்டங்களை ஒழுங்கு செய்து வழங்குதல் தொடர்பிலும் கலந்துரையாடினார்.



## கசிப்பு போத்தல்களுடன் இளைஞன் கைது

### மோட்டர் சைக்கிளும் மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் மோட்டர்சைக்கிளில் 10 போத்தல்கள் கசிப்பை வியாபாரத்துக்காக எடுத்துச் சென்ற 26 வயது இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது மோட்டர் சைக்கிளும் மீட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, வவுணதீவு, முள்ளாமுனையில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, பனையறுப்பான் பிரதேசத்தில் இருந்து கரவேட்டி பிரதேசத்துக்கு மோட்டர் சைக்கிளில் கசிப்புடன் பயணித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டார்.

முல்லைத்தீவில் 8 கிராமங்களை மகாவலி நிர்வாகத்துக்கு

# கையளிக்க எதிர்ப்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 8 கிராமங்களை, இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் கையளிப்பதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

கொக்கிளாயில் இருந்து நாயாறு வரையான கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு,கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் தெற்கு, செம்மலை கிழக்கு மற்றும் செம்மலை போன்ற 8 கிராம சேவையாளர் பிரிவுகளை மகாவலி அதிகார சபையிடம் நிர்வாக நடவடிக்கைகளுக்காக இணைக்குமாறு, மகாவலி அதிகார சபையின் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளது.



இது விடயம் கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நேற்று முன்தினம் (12) கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, மகாவலிக்கு அதிகாரத்தைக் கொடுப்பதற்கு விரும்பம் இல்லை என கிராம மக்கள் தெரிவித்துள்ளதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில், இதனை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் எடுத்துக்கொள்ளவுள்ளதாக அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வீட்டில் திருட்டுப் போன

## மோட்டார் சைக்கிள் கோவிலில் மீட்பு

■ எஸ் தில்லைநாதன்

வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், இனந்தெரியாத நபர்களால் திருடிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று, கோவிலின் முன்பாக இருந்து நேற்று (13) காலை மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை 10ஆம் திகதி, மேலைப் புலோலி, தம்பசிட்டி பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேற்படி மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில், பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், தம்பசிட்டி கண்ணகி அம்மன் கோவிலுக்கு முன்பாக மேற்படி மோட்டார் சைக்கிள் அநாதரவாக காணப்படுவதாக, பருத்தித்துறை பொலிஸாருக்கு நேற்றுத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகளால்

## பயன்தரு மரங்கள் அழிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகை புரம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள், வாழ்வாதார பயிர்களான தென்னை மற்றும் ஏனைய பயன் தரு மரங்களை அளித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தொல்லை காணப்பட்டாலும் கண்ணகை புரம் கிராமத்தில் காட்டு யானைகள் பாதிப்பு இல்லாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு திடீரென புகுந்த காட்டு யானைகள், இவ்வாறு பெருமளவான



பயன் தரு மரங்களை அழித்துள்ளன.

இது தொடர்பில் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் கிராம அலுவலர் சம்பவம் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்

குறிப்பாக, அக்கராயன், ஸ்கந்தபுரம், முட்கொம்பன் பகுதிகளுக்கான யானை வேலிகளை அமைக்கின்ற போது, இந்தப் பிரதேசங்களில் காட்டு யானைகளை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் பிரதேச விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சோலைவரியில்

## விசேட விலை கழிப்பு கொள்கை



■ எஸ்.தில்லைநாதன்

நல்லூர் பிரதேசத்தில் வாழும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் கொள்கை அடிப்படையில் விலைக்கழிவு கொடுப்பதற்கு நல்லூர் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உட்பட்ட பகுதிகளின் நிலத்தின் பெறுமானம் புதிதாக அளவீடு செய்யப்பட்டுள்ளமையால் அதற்கேற்ப வருமான வரி அறவீட்டிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையால், வறிய மக்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது என சபை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

ஐம்பது வீட்டுத்திட்டத்துக்கு

## அடிப்படை வசதிகளை வழங்கவும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, துணுக்காய், உயிலங்குளம் ஐம்பது வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றன என்றும் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறும் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள உயிலங்குளம் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட ஐம்பது வீட்டுத்திட்டத்தில் 2012ஆம் ஆண்டு காலபகுதியில் காணிகளற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவைக்குட்பட்டோர் என 60 குடும்பங்களுக்கு



வீடுகள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

அத்துடன், இவ்வாறு வழங்கப்பட்ட வீடுகள் தற்போது சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு கடந்த ஆண்டுகளில் புதிய வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்ட நிலையில், அவையும் முழுமைப்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையில், மேற்படி மாதிரிக் கிராமத்தின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் கடற்றொழிலாளர்களின்

## பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர்களை வலுப்படுத்தும் நோக்குடன் கடற்றொழிலாளர் அமைப்புக்களை புனரமைத்து சீர்ப்படுத்தும் வகையிலான கலந்துரையாடல், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலின் ஒருங்கமைப்பில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில், மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீப், கடற்றொழில் உதவி பணிப்பாளர், கடற்தொழில் திணைக்கள



அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மேலும், மாவட்டத்தில் உள்ள கிராமிய கடற்தொழிலாளர் சங்கம் மற்றும் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராமிய கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகங்களை சீர்படுத்தி, தேவையான பதிவுகளை மேற்கொண்டு கடற்றொழிலாளர் நலன்சார் செயற்பாடுகளை வலுப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

குறிப்பாக, மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் உள்ளடங்களாக மாவட்டத்தில் சில பகுதிகளில் மீனவர்கள் கடலுக்கு தொழிலுக்குச் செல்லும் போது கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகளினால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

பதுளை பிரதான அரசினர் மருத்துவமனையில்

# 55 பேருக்கு கொரோனா

■ எம். செல்வராஜா

பதுளை பிரதான அரசினர் மருத்துவமனையில் 20 வைத்தியர்கள் உள்ளிட்டு தாதிகள் மற்றும் வைத்திய உதவியாளர்கள் 55 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதாக, அரச வைத்திய சங்கத்தின் பதுளை மாவட்டத் தலைவரும் வைத்திய நிபுனருமான பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேற்படி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு, வெளி நோயாளர் பிரிவு, நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெரும் பிரிவு ஆகியவற்றில் உள்ளவர்களான 20 வைத்தியர்கள் உள்ளிட்டு 55 பேருக்கு கொவிட்- 19 தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் பலர் தத்தம் வீடுகளிலும் சிலர் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோய்த் தொற்றுக்கு இலக்கானவர்களுடன் தொடர்புகளைப் பேணிய பலரும் சுய தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து வருவதாகவும், வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ மேலும் கூறினார்.

மரணங்களும், தொற்றாளர்களும் பதுளை மாவட்டத்தில் சடுதியாக அதிகரித்து வருவதால், சுகாதார வழிமுறைகளை முறையாகவும், கிரமமாகவும் பின்பற்றுமாறும், பதுளை மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காய்ச்சல், இருமல், தொண்ட நோய், தடிமன் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் உடனடியாக அவ்வப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர்களை நாடி, உரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும்படி, வைத்திய நிபுனர் பாலித்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் தொற்றினால் சிகிச்சை பயனின்றி மரணமானவர்களின் தொகை 600 அண்மித்துள்ளது. இவ்வகையில், பதுளை- 72 பேர், பண்டாரவளை - 72 பேர், எல்ல - 15 பேர், ஹல்துமுல்ல - 23 பேர், ஹாலி-எலை - 58 பேர், ஹப்புத்தளை - 43 பேர், கந்தகெட்டிய - 07 பேர், லுணுகலை - 17 பேர், மஹியங்கனை - 75 பேர், மீகாகியுல - 17 பேர், பசறை - 38 பேர், ரிதிமாலியத்தை - 19 பேர், சொரணாதொட்டை - 11 பேர், ஊவா - பரணகமை - 40 பேர், வெலிமடை - 85 பேர் என்றடிப்படையில் 592 பேர், ஆரம்பம் முதல் 10-02-2022 வரையிலான காலப்பகுதியில் கொவிட்-19 தொற்றினால் மரணமாகியுள்ளனர் பதுளை மாவட்ட சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

11 வயது சிறுவன் துஷ்பிரயோகம்

## குற்றவாளிக்கு 19 வருடங்கள் சிறை

■ சுமணசிறி குணதிலக்க

11 வயதான சிறுவனை, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி, பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை குற்றவாளியாக இனங்கண்ட, மொனராகலை மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி நதி அபர்ணா சுவதுருகொட, 19 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்தார்.

பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு கட்டளையிட்ட நீதிபதி, அந்த நட்டஈட்டை செலுத்த தவறின், மூன்றரை வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட அனுபவிக்கவேண்டும். நட்டஈட்டை செலுத்தாவிடின், அதனை தண்டப்பணமாக அறவிடுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

59 வயதான நபருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சுகயீனமடைந்திருந்த தனது தந்தைக்கு பெனடோல் வாங்கிக்கொண்டு சைக்கிளில் வீட்டுக்கு திரும்பி வந்துகொண்டிருந்த போது, தோட்டத்திலுள்ள சிறு கூடாரத்துக்குள் அச்சிறுவனை அழைத்துச் சென்று, இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

நீண்டநாள் இடம்பெற்ற வழக்கை விசாரணையில், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில், இரண்டு குற்றங்களிலும் குற்றவாளியாக இனங்காணப்பட்டதை அடுத்தே, அவருக்கு மேற்கண்டவாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## 50 அடி பள்ளத்தில் லொறி: ஒருவர் பலி; சாரதி மாயம்




வத்துகாமம் - எல்கடுவ வீதியில் பயணித்த லொரி ஒன்று, மதகை உடைத்துக்கொண்டு, சுமார் 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற இந்த விபத்தில், 32 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலுமொருவர் காயமடைந்து வத்துகாமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று வத்துகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியின் வளைவில் இருந்த பாதுகாப்பற்ற பாலத்தை கடந்து செல்வதற்கு முயன்ற போது, அந்த லொறி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் சாரதியும் காயமடைந்துள்ளார். எனினும், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை தொடர்பிலான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை என பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாரதியின் கவனயீனமே இவ்விபத்துக்கு காரணமெனத் தெரிவித்துள்ள பொலிஸார், சாரதியை தேடி வலைவிரித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.



## வெறிச்சோட்டம்...

சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக, சுகாதார சேவையும் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் நேற்றும் (13) முன்னெடுக்கப்பட்டன. பதுளை பொது வைத்தியசாலையின் செயற்பாடுகள் முற்றாக செயலிழந்து காணப்பட்டன. (பாலித ஆரியவங்ச)

## மீண்டும் நடைபெறுகின்றது தமிழ் பயிற்சிகள்



கொரோனா பரவல் காரணமாக தடைப்பட்டிருந்த அரச ஊழியர்களுக்கான இரண்டாம் மொழி தமிழ் பயிற்சிகள் நேரடியாக தற்போது நாடெங்கிலும் நடைபெறுகிறது. இடைநடுவில் கைவிடப்பட்டிருந்த கண்டி - குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரச ஊழியர்களுக்கான பயிற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. நிகழ்வின் நிறைவில் இடம;பெற்ற அரச ஊழியர்களின் தமிழ் கலை நிகழ்ச்சிகளையும் கலந்துகொண்ட அதிதிகள் மற்றும் வளவாளர்களையும் படங்களில் காணலாம்

(மெய்யன்)

## குருவிட்டவில் ஒருவர் படுகொலை

குருவிட்டை - பொரலுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி 49 வயதான ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றிற்குள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறே இவ்வாறு கொலைச் சம்பவத்தில் முடிவடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டிற்குள்ளிருந்து எரிந்தநிலையில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், இக் கொலைச் சம்பவம் தொடர்பில் தெரணியகல பகுதியை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

## புதிய பி.கேதீஸ் மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு

ஸ்ரீ சத்ய சாய் சர்வதேசப் பாடசாலையில், 2022 இற்கான புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு 11.2.2022 வெள்ளிக்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலவாக்கலை- லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் அசோக சேபால,கொட்டகலை தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் யோகேஸ்வரன், சத்ய சாய் வித்யா நிலைய பணிப்பாளர் வைத்தியர். வே.கருணைராசன், அதிபர் க.உமாதர்சினி ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

(படங்கள்: பி.கேதீஸ்)























## மஹா கும்பாபிஷேகம்

உடபுஸ்ஸல்லாவ டலோஸ் தோட்ட பாலசுப்பிரமணிய ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் 11.02.2022 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் கலந்து கொண்டார்.

கடந்த 07.02.2022 அன்று விசேட பூஜைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு 11.02.2022 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றதுடன் தொடர்ந்து 48 நாட்களுக்கான பூஜைகள் நடைபெறும்.

(படங்கள்: டி.ஷங்கீதன்)







# உழைக்கும் மக்களின் வயிற்றில் ஓங்கி

அரச ஊழியர்களைப் பொறுத்தமட்டில், இறுதிக் காலக்கட்டத்தில் ஓய்வூதியம் கை கொடுக்கும். ஓய்வூதியம் இல்லாத தனியார் துறைகளைச் சேர்ந்தவர்கள், சேமித்திருந்தால் இன்றேல் காப்புறுதி அல்லது நிலையான வைப்புகளைச் செய்திருந்தால், நிதி நிறுவனங்களில் முதலீடுகளைச் செய்திருப்பார்களாயின் பிற்காலத்தில் யாரையும் எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமில்லை.

மேலே குறிப்பிட்ட எந்தவொரு முதலீடுகளையும் செய்யாதவர்கள், பெரிய சல்லி அல்லது சின்ன சல்லியை எதிர்பார்திருக்க வேண்டும். அதாவது, ஊழியர் சேமலாப நிதியை (ஊ.சே.நி) பெரிய சல்லியென்றும், ஊழியர் நம்பிக்கை நிதியை (ஊ.ந.நி) சின்னச் சல்லியென்றும் பெரும்பாலானவர்கள் சுருக்கமாக குறிப்பிட்டு, எதிர்கால திட்டங்களை வகுத்துக்கொள்வர்.

இந்நிலையில்தான், உழைக்கும் மக்களின் தலையில் இடி விழுந்தாற் போல, வரி அறிவீடு தொடர்பில் புதிய அறிவிப்பொன்று வெளியாகியுள்ளது. இது, பொதுவெளியில் பேசு பொருளாக மாறிவிட்டது. அதற்கெதிரான ஆர்ப்பாட்டங்களும் உழைக்கும் வர்க்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த, கூடுதல் வரி அறவீடு தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவித்தலை, தொழில் அமைச்சு வெளியிடவில்லை. நிதியமைச்சே நேரடியாக செய்துள்ளது என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உழைக்கும் வர்க்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் களத்துக்கு தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சென்றிருந்தமையும் கவனிக்கத்தக்கது. ஆக, அந்த கூடுதல் வரி அறவிடுவதற்கு அரசாங்கத்துக்குள் எதிர்ப்பு உள்ளது.

அதாவது, தேசிய வருமான வரிச் சட்டத்தின் கீழான, நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்படும் நிதியத்தில், 25 சதவீதம் கூடுதல் வரியாக அறிவிடப்படவுள்ளது. இது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகிய இரண்டில் இருந்தும் அறவிடப்படவுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரமே இந்த கூடுதல் வரி அறவிடப்படவுள்ளது. இது, உழைக்கும் மக்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடாகும். இதனூடாக, மிஞ்சும் நிதியை, தேர்தலுக்காக பயன்படுத்துவதற்கு அரசாங்கம் கொள்ளையடிக்கிறது என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த கூடுதல் வரியை அறவிடுவதன் ஊடாக, தனியார் துறையினர் மற்றும் அரசாங்கத்தின் சட்டபூர்வ சபைகளில் கடமையாற்றும் பணியாளர்கள் தங்கள் பதவிக்காலத்தின் முடிவில் பெறும் பொருளாதார நன்மைகள் மீதான தாக்கத்தை செலுத்தும். இவ்விரு தரப்பினரும் தங்களுடைய இறுதிக் காலத்தை கழிப்பதற்கான ஒரேயொரு வழி, இதுவாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக அரச வங்கிகளில் கடமையாற்றுவோருக்கு ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு மேலதிகமாக ஓய்வூதிய சம்பளமும் கிடைக்கின்றது. ஆதலால், அந்த துறையைச் சார்ந்தவர்களுக்கு, இந்த கூடுதல் வரி பெரும் தாக்கத்தை செலுத்தாது.

மாதாந்தம் சம்பளம் பெற்று, வரியையும் செலுத்தும் தனியார் துறைகளைச் சார்ந்த பணியாளர்களே, இந்த தீர்மானத்தினால் பெரிதும் பாதிக்கப்படவுள்ளனர்.

இதற்கு எதிராக, எதிர்க்கட்சியினர் மட்டுமன்றி, ஆளும் கட்சியின் பிரதான பங்காளியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், கூடுதல் வரி அறவிடும் முறைமையை கடுமையாக எதிர்க்கிறது. ஆகையால், உழைக்கும் மக்களின் வயிற்றில் அடிக்காமல் இருப்பதே நல்லது என்பதை நாமும் வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நவரசங்களுடன் பிணைந்ததே உலக வாழ்க்கை. இதனுள் சோகமும் ஒன்று. இதனைத் தவிர்க்க முடியாது. காதல், கருணை, அருவருப்பு, சோகம், வீரம், கோபம், நகைச்சுவை, சந்தோஷம் இவைகள் மனிதரைவிட்டு விலகுவது இல்லை. நவரசங்களில் பல ஒரே சமயத்தில் சில மனிதர்களுக்கு வருவதுண்டு.

காதலுடன் துன்பங்களும் வருவதும் உண்டு. வீரத்தில் தகுந்த நேரத்தில் கோபமும் பீறிட்டு வரும்.

எவ்வாராயினும் வந்த வாழ்வினை ரசனையுடன் அனுபவிக்க வேண்டும். எதனையும் தாங்கும் நிலையில் எம்மை நாம் தயாராக்கி வைக்க வேண்டும். அநாவசியமான சஞ்சலம், மனக்குமுறலை தவிர்க்கும் பக்குவ நிலைக்கு வரவேண்டும்.

புலன்களை அடக்கப் பலர் இன்று யோகாசனம் செய்கின்றனர். நல்ல விஷயங்களைச் செய்யும் முன், தான், தூய நிலையில் இருக்கின்றேனா, என்பதை தனக்குள் கேட்க வேண்டும்.

தனது நெஞ்சத்தினுள் பொய் உரைத்தலாகாது. கூட எம்முடன் இருக்கும் மனதுடன், திறந்த நிலையில் பேசுவதில் ஏது தயக்கம், வெட்கம்.

நவரசங்களின்னூடாக வாழ்க்கையின் அனுபவங்களை நாம் நுகர்கின்றோம். கிடைக்கும் அனுபவங்கள் நல் படிப்பினையாகட்டும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

அநுராதபுரக் கூட்டமும்,

# "பொதுவேட்பாளருக்கான" போட்டியும்




என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது "கொவிட்-19" நோய்த்தொற்றுப் பரவல் காலகட்டத்தில் எதிர்க்கட்சிகள் அப்படி ஆர்ப்பாட்டம் நடத்தியது நோய்ப்பரவலை அதிகரிக்கும் என்று விமர்ச்சித்துக்கொண்டிருந்த அரசாங்கம், அண்மையில் தானும் ஒரு பெரும் எழுச்சிக் கூட்டத்தை நடத்தியிருந்தது. அரசியல் களத்தில் தமது ஆதரவு வீழ்ச்சி காணும் போதெல்லாம், இலாவகமாக அதனை மீட்டெடுப்பதில் ராஜபக்ஷர்கள் சமர்த்தர்கள். கடந்த இரண்டாண்டுகளில் வீழந்துபோன தமது பிம்பத்தை மீட்டெடுக்க மீண்டும் பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

நுகேகொடை கூட்டம் போன்று கொழும்பில் ஒரு கூட்டத்தை நடத்தாது, அவர்கள் அநுராதபுரத்தில் இந்த எழுச்சியை நடத்தியமை கவனிக்க வேண்டியதாகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ராஜபக்ஷர்களின் ஆட்சியில் அதிகம் பாதிப்பைச் சந்தித்தது இலங்கைப் பொருளாதாரம்தான். அந்த பாதிப்பை நேரடியாக அனுபவித்தவர்கள் பெரும்பாலும் நகர்ப்புற மக்கள்தான்.

உரப்பிரச்சினை, உரத்தட்டுப்பாடு தவிர்ந்த ஏனைய பிரச்சினைகள் பலவும் நகர்ப்புறத்தைத் தாண்டிய பகுதிகளில் பெரும்பிரச்சினையாக இன்னும் உருவெடுக்கவில்லை. உரப்பிரச்சினைதான், நகர்ப்புறங்களைத் தாண்டிய பகுதிகளில் ராஜபக்ஷர்களுக்கெதிரான பெரும் சவாலாக எழுந்து நிற்கிறது. அதனைத் தாண்டிய விலைவாசி அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம், எரிவாயுத் தட்டுப்பாடு என்பன நகர்ப்புறங்களில் ஏற்படுத்திய தாக்கம் அளவிற்கு, நகர்ப்புறத்தைத் தாண்டிய பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆகவே சரிந்துபோயுள்ள தமது பிம்பத்தை, குறைந்த பாதிப்பு உள்ள பகுதிகளிலிருந்து சரிசெய்யவே ராஜபக்ஷர்கள் விரும்புகிறார்கள் என்பதை நாம் ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. கொழும்பு என்பது ராஜபக்ஷர்களின் கடைசி முன்னுரிமைதான். அவர்களுக்கு நன்றாகவே தெரியும் அவர்களுடைய வாக்குவங்கி என்பது நகர்ப்புறமல்லாத "சிங்கள-பௌத்த" மக்களின் வாக்கு வங்கி என்பது. அதனை மீண்டும் பலப்படுத்தும் முயற்சியில்தான் தற்போது அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகிறார்கள்.

மத்தியவங்கி பில்லியன் கணக்கில் அச்சடிக்கும் பணத்தைக் கொண்டு, அது ரூபாவின் மதிப்பை வீழ்த்தினாலும், இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரழித்தாலும், இலங்கையை சிம்பாப்வே, அல்லது லெபனான் போன்ற நிலைக்கு இட்டுச்சென்றாலும் கவலையில்லை, ஆட்சியில் தாம் இருப்பதை உறுதிப்படுத்தினால் போது என்ற சுயநல பிடிவாதத்தோடு, ராஜபக்ஷர்கள் அடுத்த இரண்டு வருடங்களில் தீவிரமான தமது வாக்கு வங்கியை கவரத்தக்க பணிகளை முன்னெடுப்பார்கள். இதுதான் பெசில் ராஜபக்ஷவின் தந்திரோபாயமாக இருக்கும் என்பதை இலகுவில் ஊகித்துக்கொள்ள முடியும். தெளிந்த அரசியல் அறிவு இல்லாத, குறைந்த ஞாபகத்திறனுள்ள, பேரினவாத உணர்ச்சி ததும்பும் வாக்குவங்கியைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாட்டில், தனது தந்திரோபாயம் வேலைசெய்யும் என்று பெசில் ராஜபக்ஷ நம்புவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. அதேவேளை இது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷர்கள் பாசறையிலிருந்து போட்டியிடப்போவது யார் என்ற கேள்வியையும் எழுப்பி நிற்கிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல்பற்றிப் பேசுவதற்கு இன்னும் நிறையக் காலமிருக்கிறது என்பதுதான் யதார்த்தமாக இருந்தாலும், எல்லாத் தரப்புக்களும் அதற்கான ஆரம்பகட்ட முஸ்தீபுகளில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். ராஜபக்ஷர்களைப் பொறுத்தவரையில், மீண்டும் கோட்டாவே போட்டியிடுவாரா, அல்லது பெசில் போட்டியிடுவாரா என்பதே பிரதான கேள்வியாக இருக்கிறது. யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் இரண்டாண்டுகளில் ஒரு தெளிவு கிடைக்கும். இன்றைய சூழலில், கோட்டாபய தன்னுடைய பிரபல்யத்தையும், கவர்ச்சியையும் இழந்து நிற்கும் நிலையில், மீண்டும் போட்டியிட்டால் கடந்தமுறை கிடைத்தளவு வாக்குகள் கிடைக்குமா என்பது ஐயமே. இந்த நிலையை அவரால் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் மாற்றிவிட முடியுமா என்பது ஐயத்திற்குரியதே.

ராஜபக்ஷர்களின் தரப்பில் போட்டியிடுவது யாராயினும், அவர்களின் வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பதில் அவர்களை எதிர்த்துப் போட்டியிடுவது யார் என்பதும் முக்கியமானது. ஐக்கிய தேசியக் கட்சி உயிரற்றுப் போயிருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி உள்ளுக்குள் உடைந்துபோய் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தி தனிவழி போய்க்கொண்டிருக்கிறது. இன்னொரு வழியில் மைத்ரிபால சிறிசேனவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ராஜபக்ஷர்களை எதிர்த்துக் களம் காணப்போவது யார் என்பதில் கடுமையான போட்டி உருவாயிருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவர்கள் அனைவரும் தனித்தனியே போட்டியிட்டால், ராஜபக்ஷர்கள் இலகுவாக வெற்றிபெற்று விடுவார்கள். ராஜபக்ஷர்களினை எதிர்க்கும் அனைவரும் ஒன்றிணைந்து தமக்கு ஆதரவுதராத வரை தம்மால் வெல்ல முடியாது என்பது இந்தப் போட்டியிலுள்ள அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆகவே ராஜபக்ஷர்களை வெல்வதற்கான தற்காலிக சூத்திரமாக அமைவது எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்ததொரு "பொதுவேட்பாளரைக்" களமிறக்குவதுதான் என்பது பொதுவானதொரு நம்பிக்கையாக மட்டுமல்லாமல், தேர்தல் அரசியல் யதார்த்தமாகவும் மாறிவிட்டது. அப்படிப்பட்ட பொது வேட்பாளர் என்பவர், "சிங்கள-பௌத்த" வாக்கு வங்கியின் பாதியளவையேனும் பெற்றுக்கொள்ளக் கூடியவராக இருப்பதுடன், சிறுபான்மையின வாக்குவங்கியையும் கவர்ந்துகொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்!

மைத்ரிபால சிறிசேனவின் வெற்றி, "பொது வேட்பாளரானால்" வென்றுவிட முடியும் என்ற நம்பிக்கையை வழங்கியிருந்ததனால், பலருக்கும் அந்த ஆசை தொற்றிக்கொண்டது. இன்றிருக்கும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து "பொது வேட்பாளராகக்" கூடிய நிலையில் எவரும் இல்லை என்பதுதான் யதார்த்தம். ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில், அதற்குள் சஜித் பிரேமதாசவிற்கான ஆதரவு குறைந்துள்ளது என்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அதிலிருந்து சம்பிக்க ரணவக்க "43 படையணி" என்ற பெயரில் தனிப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். பொன்சேகாவிற்கும் ஜனாதிபதிக் கனவு இருந்துகொண்டிருப்பதையும் உணரக்கூடியதாக இருக்கிறது.

மீண்டும் தன்னை பொதுவேட்பாளராக நிறுத்துவார்கள் என்ற நம்பிக்கை மைத்ரிபால சிறிசேனவிடம் இருக்கிறது. அதற்காகத்தான் அவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கிறார். ஜே.வி.பி-யின் பெயர் மக்கள் மத்தியில் நல்ல அபிப்ராயத்தைக் கொண்டிராத நிலையில், அந்தப் பெயருடன் ஒரு பலமான தேசிய சக்தியாக வளர முடியாது என்று தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஜே.வி.பி இயங்கிக் கொண்டிருக்கிறது. அநுர குமாரவை பொது வேட்பாளராகக் களமிறக்கும் கனவு நிச்சயம் தேசிய மக்கள் சக்திக்கு இருக்கும் எனலாம். இவர்களெல்லாம் ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் இலங்கையின் செல்வந்த தொழிலதிபர்களில் ஒருவராக தம்மிக்க பெரேரா அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்ற ஊகங்களும் பேசுபொருளாக இருக்கின்றன. தம்மிக்க பெரேரா அவ்வப்போது வெளியிடும் கொள்கைப் பத்திரங்கள், தீர்க்கதரிசனக் குறிப்புக்கள் என்பன இந்த ஊகங்களுக்கு வழிவகுத்திருக்கலாம்.

எது எவ்வாறாயினும், ஒருவர் யதார்த்தத்தில் வெற்றிவாய்ப்புள்ள "பொது வேட்பாளர்" ஆக வேண்டுமென்றால், வாக்குவங்கி செல்வாக்குள்ள கட்சிகள் அனைத்தும் அவரை ஆதரிக்க வேண்டும். இல்லையென்றால் வாக்குகள் சிதறுண்டு, அது ஆளுந்தரப்பிற்கே சாதகமானதாக அமையும். மேலும், முன்னர் குறிப்பிட்டது போல, குறித்த "பொது வேட்பாளர்" "சிங்கள-பௌத்த" வாக்கு வங்கியின் பாதியளவிலான வாக்குகளையேனும் பெற்றக்கொள்ளக் கூடியவராக இருப்பதுடன், சிறுபான்மையின வாக்கு வங்கிகளையும் கவரக்கூடியவராக இருக்கவேண்டும். இது மிகக் கடினமானது. சிறுபான்மையினரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என்று ஒரு "பொது வேட்பாளர்" இரகசியமாக சிறுபான்மையினக் கட்சிகளிடம் ஒத்துக்கொண்டால் கூட, அந்தச் செய்தி பெரும்பான்மையின வாக்குகளை பாதிப்பதாகவே பெருமளவிற்கு நம்பப்படுகிறது. ஆகவே ஏற்றதொரு அரசியல் தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சிறுபான்மையினரை உதாசீனம் செய்துவிட்டால், அவர்கள் வாக்களிக்கவே மாட்டார்கள். அதுவும் "பொது வேட்பாளருக்கே" இழப்பாக அமையும். ஆகவே பெரும்பான்மையினத்தவரும், சிறுபான்மையினத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு தளத்திலிருந்து தன்னுடைய அரசியலை முன்வைக்கக்கூடியவராக "பொது வேட்பாளர்" இருக்கும் போதுதான், அவர் வெற்றிபெறக்கூடிய பொது வேட்பாளராக அமைவார். வெறும் ராஜபக்ஷ எதிர்ப்பு என்பது போதாது.

ராஜபக்ஷர்களுக்கு இந்தப் பிரச்சினையில்லை. அவர்களால் பெரும்பான்மையின வாக்குவங்கியை மட்டும் முன்னிறுத்தி தேர்தலில் வெற்றிபெற முடியும். அதனைத்தான் அவர்கள் 2019-ல் செய்தார்கள். அவர்களுக்கு சிறுபான்மையினரின் வாக்குவங்கி அத்தியாவசியம் இல்லை. அதனால்தான் அவர்கள் சிறுபான்மையினர் பற்றிக் கவலைகொள்வதில்லை. சிறுபான்மையினர் பற்றிய அவர்களின் கவலையெல்லாம், சர்வதேச அழுத்தத்தைச் சமாளிக்க மட்டும்தான். தேர்தலில் சிறுபான்மையின வாக்குகளுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுப்பதே இல்லை. ஆனால் "பொது வேட்பாளரின்" நிலை இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

## கடிதங்கள்

### 50 வீடுத்திட்டத்தை ஏடெடுத்துப் பாருங்கள்

முல்லைத்தீவு துணுக்காய் உயிலங்குளம் ஐம்பது வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்கள், போதிய அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில், தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறும் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள உயிலங்குளம் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட ஐம்பது வீட்டுத்திட்டத்தில் காணிகளற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவைக்குட்பட்டோர் என 60 குடும்பங்களுக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீடுகள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

இதனைவிட தினமும் போக்கு வரத்துக்குப் பயன்படுத்தும் பிரதான வீதிமுதல் குடியிருப்பு வீதிகள் வரை எந்தவீதிகளும் புனரமைக்கப்படாமல் காணப்படுவதுடன் தண்ணீர்வசதி, முன்பள்ளி வசதிகள், பாடசாலை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்மையால் இங்கு குடியிருந்த 60 குடும்பங்களில் 28 வரையான குடும்பங்கள் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டன.

இந்த நிலையில் மேற்படி மாதிரிக் கிராமத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அங்கு வாழும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (பாஸ்கரன் சுப்ரமணியம்)



இலங்கை காப்புறுதி நிறுவனத்துடன் (SLII)

# கொமர்ஷல் வங்கி கைகோர்ப்பு



கொமர்ஷல் வங்கி ஐக்கிய இராச்சியத்தி ன் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் இலங்கை பிரிவாக செயற்படும் இலங்கை காப்புறுதி நிறுவனத்துடன் (SLII) இணைந்து அதன் உறுப்பினர்களுக்கு தமது தொழில்சார் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விசேட கல்விக் கடன் உதவி மற்றும் இலகு கொடுப்பனவுத் திட்டம் போன்றவற்றை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

SLII மாணவர்களுக்கு கொமர்ஷல் வங்கி வழங்கும் சலுகைகள் அந்த நிறுவனத்தின் கற்கைகளுக்கான கட்டணத்தில் 90 சதவீதத்தை பூர்த்தி செய்யும் வகையில் குறைந்த வட்டியிலான கடன் திட்டம், வட்டியற்ற இலகு தவணைக் கொடுப்பனவுகளுக்கு வசதியான கிரடிட் கார்ட் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த கிரடிட் கார்ட் இலகு கொடுப்பனவுத் திட்டங்களுக்காக, வங்கிக் கட்டணங்கள் மற்றும் தரகுக் கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது என வங்கி அறிவித்துள்ளது.

விசேட கல்விக் கடன் திட்டம் மற்றும் இலகு கொடுப்பனவுத் திட்டம் என்பன ஐக்கிய இராச்சியத்தின் பட்டயக் காப்புறுதி நிறுவனத்தோடு இணைந்த 'காப்புறுதி சான்றிதழ்' கற்கை, 'காப்புறுதி டிப்ளோமா கற்கை' என்பனவற்றுக்கு வழங்கப்படும். கிரடிட் கார்ட்கள் மூலம் தொழில்சார் பரீட்சைகளுக்கான நுழைவு மட்டக் கொடுப்பனவு, SLII வழங்கும் அடிப்படை கற்கை மற்றும் டிப்ளோமா கற்கை என்பனவற்றுக்கான கொடுப்பனவுகளையும் வழங்க முடியும் என வங்கி அறிவித்துள்ளது.

வங்கிக்கும் SLII க்கும் இடையிலான இந்தப் பங்குடைமை பற்றிக் குறிப்பிட்ட வங்கியின் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி ஹஸ்ரத் முனசிங்க 'கொமர்ஷல் வங்கி எப்போதுமே தனது வாடிக்கையாளர்களின் வளர்ச்சி மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு கைகொடுப்பதில் கவனம் செலுத்தி வந்துள்ளது. SLII உடனான இந்தப் புதிய நிதி உதவிப் பங்குடைமை மூலம் இலங்கையின் காப்புறுதித் துறையில் தொழிற்சார் கற்கைக்கும் கைகொடுக்கவுள்ளது. தொழிற்சார் அபிவிருத்திகளுக்கு உதவுவது மட்டுமன்றி அந்தத் துறையின் தொழிற்சார் ஆற்றல் அபிவிருத்திக்கும் உதவுவது இதன் நோக்கமாகும்' என்று கூறினார்.

கடந்த ஆண்டிலும் இதுபோன்ற பங்குடைமையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் கொமர்ஷல் வங்கி இணைந்தது. அதன் பட்டப்பின்படிப்பு ஆய்வுத்துறை மாணவர்களின் கல்விக்கு உதவுவதே இந்தத் திட்டமாகும். முன்னுரிமை வட்டி வீதத்தின் அடிப்படையில் ஏனைய சலுகைகளுடன் இந்த உதவி வழங்கப்படுகின்றது.

றொடுன்டா டவர்ஸில் SLT–MOBITEL

# புதிய வாடிக்கையாளர் சேவை நிலையம் திறப்பு




SLT-MOBITEL, தனது முதலாவது drive-through வசதியுடனான வாடிக்கையாளர் சேவை நிலையத்தை றொடுன்டா டவர்ஸில் திறந்துள்ளது.

இல. 109, காலி வீதி, கொழும்பு 3 எனும் முகவரியில் அமைந்துள்ள றொடுன்டா டவர்ஸில், நிறுவப்பட்டுள்ள இந்த சேவை நிலையத்தை SLT குழும தவிசாளர் றொஹான் பெர்னான்டோ திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் SLT குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, மொபிடெல் பிரைவட் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென, SLT பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க, மொபிடெல் பிரைவட் லிமிடெட் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி சஷிக செனரத் மற்றும் SLT-MOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவ அணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தனது பிரசன்னத்தை மேம்படுத்துவதுடன், நிலையான, மொபைல் மற்றும் PEO TV சேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் SLT-MOBITEL இன் பரந்தளவு திட்டத்தின் அங்கமாக இந்த புதிய சேவை நிலையத்தின் திறப்பு அமைந்துள்ளது. புரட்சிகரமான நவீன வசதிகளைக் கொண்டுள்ள இந்த புதிய கிளையினால் நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்படுவதுடன், SLT-MOBITEL வாடிக்கையாளர்களுக்கு தமது சகல விதமான இணைய இணைப்புத் தேவைகளையும் சிக்கல்களற்ற வகையில் இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் வழங்குகின்றது.

இந்தக் கிளையில் காணப்படும் பிரத்தியேகமான உள்ளம்சமாக, வாடிக்கையாளர்களுக்கு தமது வாகனங்களில் இருந்தவாறே சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய drive-through வசதி முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் தன்னிறைவு மற்றும் சௌகரியத்தை மேம்படுத்துவம் வகையில் இந்தக் கிளை வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், புதிய நிலையத்தினூடாக ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் வாடிக்கையாளர்கள் விஜயம் செய்து ... portal இல் தமது கோரிக்கைகளை பதிவு செய்ததும், அடுத்து வரும் வேலைநாளில் அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் இருப்பிடங்களுக்கு புதிய இணைப்புகளை அனுப்பி வைக்கும் சேவையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கிளையில் அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களின் பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்யப்படுவதை இவர்கள் உறுதி செய்வார்கள். SLT- MOBITEL தொடர்ந்தும் நிலையான மற்றும் மொபைல் தொலைத்தொடர்பாடல் பிரிவில் முன்னிலையில் திகழ்வதுடன், நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு ஒப்பற்ற வாடிக்கையாளர் அனுபவங்களை சகல இலங்கையர்களுக்கும் வழங்குகின்றது.

தமிழகம்

# மேக்ஸ்வெலின் திருமண பத்திரிக்கை வைரலாகியது

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான கிளென் மேக்ஸ்வெல் (Glenn Maxwell) தமிழகத்தைச் சேர்ந்த 'வினி ராமனைத்' திருமணம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேக்ஸ்வெல் கடந்த முறை நடைபெற்ற ஐ.பி. எல்.லில் பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் அணியில் சிறப்பாக விளையாடியதையடுத்து, இம் முறையும், ஐபிஎல் ஏல போட்டியில் குறித்த அணி, இவரை இந்திய மதிப்பில் 11 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவர் தனது காதலியும், அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் தமிழகத்தின் மேற்று மாம்பலத்தைச் சேர்ந்த வினி ராமன் என்பவரை கடந்த 2020ஆம் ஆண்டு இந்திய முறைப்படி நிச்சயதார்த்தம் செய்துள்ள நிலையில், வரும் மார்ச் மாதம் 27ஆம் திகதி திருமணம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





அத்துடன் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டுள்ள இவர்களது திருமண பத்திரிக்கையானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆந்திரா

## ரூ. 539 கோடி மதிப்புள்ள கஞ்சா கருகியது



ஆந்திராவில் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள கஞ்சாவை (இலங்கை மதிப்பில் 539 கோடி ரூபாய் ) பொலிஸார் தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றுள்ளது.

ஆந்திராவில் அண்மைக்காலமாக கஞ்சாக் கடத்தல் மற்றும் கஞ்சாப் பாவனை, என்பன அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஆந்திராவின் கடலோர மாவட்டங்களில் கடந்த சில ஆண்டுகளாக பறிமுதல் செய்யப்பட்ட பெருமளவு கஞ்சாப் பொதிகள் நேற்று முன்தினம் (12) தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்து வெளியான வீடியோப் பதிவும் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மகாராஷ்டிரா

## மருமகளின் உயிரை காப்பாற்றிய மாமனார்

மகாராஷ்டிரா மாநிலம் அவுரங்காபாத் ஜல்னா மாவட்டத்தைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க பெண்ணுக்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு சிறுநீர் கழிப்பதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் பின்னர், உடலில் ஆங்காங்கே வீக்கமும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மருத்துவரை அணுகி பரிசோதனையில் ஈடுபட்டபோது, அப் பெண்ணுக்கு சிறுநீரகம் செயலிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

எனினும் சிறுநீரகம் தானமாக வழங்க யாரும் கிடைக்காததால், இறுதியில் பெண்ணின் மாமனாரே



தனது ஒரு சிறுநீரகத்தை மருமகளுக்கு தானமாக வழங்க முடிவு செய்துள்ளார்.

இதையடுத்து, பெண்ணுக்கு மாமனாரின் சிறுநீரகத்தை கொண்டு கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை மருத்துவர்கள் வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

இந்நிலையில் மருமகளின் உயிரை காப்பாற்ற மாமனாரே தனது ஒரு சிறுநீரகத்தை தானமாக வழங்கிய நிகழ்வு மக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிரா

## நினைவிடம் கட்டுவதில் விருப்பமில்லை



இந்தியாவின் புகழ்பெற்ற பின்னணி பாடகி லதா மங்கேஷ்கர், உடல் நலக்குறைவு காரணமாக மும்பையில் கடந்த 6ஆம் திகதி காலமானார்.

இதனையடுத்து அவரது 75 ஆண்டு கால இசைப் பயணத்தை போற்றும் விதமாக மும்பையில் உள்ள கலினாவில் 2.5 ஏக்கர் நிலத்தில் இசைப் பள்ளி அமைக்கப்படும் என்று மகாராஷ்டிரா மாநில அரசு அறிவித்தது.

இந்நிலையில்,பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) ராம் கதம் (எம். எல்.ஏ), என்பவர் லதா மங்கேஷ்கரின் உடல் தகனம் செய்யப்பட்ட சிவாஜி பூங்காவில் நினைவிடம் ஒன்று அமைக்க வேண்டும் என்று மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் உத்தவ் தாக்கரேவுக்கு கடிதம் எழுதினார்.

ஆனால் இதற்கு எதிராக சர்ச்சை கருத்துகள் எழுந்து வருகிறது. மேலும், சிவாஜி பூங்காவில் சிவசேனா உணர்வுப்பூர்வமான தொடர்பைக் கொண்டிருப்பதால் பாஜகவின் கோரிக்கையை சிவசேனா நிராகரிக்கிறது என ராம் கதம் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்காளம்

## செல்பி எடுத்த இளைஞர்கள் மரணம்

தண்டவாளத்தில் நின்று செல்பி எடுத்த இரு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் மேற்கு வங்காளத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்கு வங்காள மாநிலம் மெகுனிபூர் மாவட்டம் ரங்கேமகி என்ற பகுதியில் கங்கஸ்வதி ஆறு ஓடுகிறது.

இதன் அருகே ரெயில்வே தண்டவாளம் உள்ளது. சிறந்த சுற்றுலா தலமாக திகழும் இந்த பகுதிக்கு தினமும் ஏராளமானோர் வருகைதருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு வந்த இளைஞர்கள் மூவர் தண்டவாளத்தில் நின்று செல்பி எடுத்துக் கொண்டிருந்த போது எதிரே வந்த ரெயிலொன்று மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண் இமைக்கும் நேரத்தில் செல்பி எடுத்துக்கொண்டிருந்த 3 பேர் மீது ரெயில் பயங்கரமாக மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட மிதுன் கான் (வயது 36), அப்துல்கெயின் (32) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர்.

மற்றொருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகா

## திருமண மேடையில் மரணித்த இளம் பெண்



இளம் பெண்ணொருவர் திருமண மேடையில் வைத்து உயிரிழந்த சம்பவம் கர்நாடகாவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கர்நாடகா மாநிலம் கோலார் மாவட்டம் ஸ்ரீநிவாஸ்பூரில் சைத்ரா (25) என்ற பெண்ணுக்கு திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கான வரவேற்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் சைத்ராவும், மணமகனும் மேடையில் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்த போது சைத்ரா திடீரென மேடையிலேயே மயங்கி விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா

## கணவனின் சடலத்தை தூக்கி வீசிய மனைவி, மகன்

பெண்ணொருவர் தனது மகனுடன் இணைந்து தனது கணவனைக் கொலை செய்துவிட்டு , சடலத்தை 7 ஆவது மாடியில் இருந்து தூக்கி வீசிய சம்பவம் மகாராஷ்டிராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிராவின் அம்போலி பகுதியை சேர்ந்தவர் சாந்தனுகிருஷ்ண சேஷாத்ரி (54). இவர் தனியார் நிறுவனமொன்றில்



உதவி பொது மேலாளராக பணியாற்றி வந்துள்ளார். இவரது மனைவி ஜெய்ஷீலா, மகன் அரவிந்த் (26). பொறியியல் பட்டதாரி.

இந்நிலையில் கடந்த 10 ஆம் திகதி சேஷாத்ரி மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துக் கொண்டதாக அவரது மனைவி ஜெய்ஷீலா மற்றும் மகன் அரவிந்த் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்ப இடத்திற்கு வந்த பொலிஸார் , சேஷத்ரியின் மனைவி மற்றும் மகனிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

பிரான்ஸ்

தடுப்பூசியைச் செலுத்தியிருந்தால்

# பரிசோதனை தேவையில்லை

பிரான்ஸிற்கு வரும் சுற்றுலா பயணிகள் கொரோனாப் பரிசோதனை செய்யத் தேவையில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பிரான்ஸில் அண்மைக்காலமாக கொரோனாத் தொற்றுப் பரவலானது குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்நாட்டில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் "பிரான்ஸிக்கு வரும் சுற்றுலா பயணிகள் கொரோனா தடுப்பூசி செலுத்தி இருந்தால் போதுமானது. மேலும் கொரோனா பரிசோதனை




செய்யவேண்டாம் என்றும், தடுப்பூசி செலுத்திய சான்றிதழை காண்பித்தால் போதும் என்றும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

## 2ஆவது மனைவியை விவாரத்து செய்தஅன்றே 3 ஆவது திருமணம்



பாகிஸ்தானில் அரசியல் பிரமுகர் ஒருவர், தனது 2ஆவது மனைவியை விவாகரத்து செய்த அன்றே, தன்னைவிட 31 வயது குறைவான பெண்ணை மூன்றாவதாகத் திருமணம் செய்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


பாகிஸ்தானின் பிரபல கட்சியின் பிரமுகராக இருப்பவர் ஆமிர் லியாகத். 49 வயதான இவர் ஏற்கனவே, முதல் மனைவியை விவாரத்து செய்துவிட்டு 2ஆவது திருமணம் செய்திருந்தார்.

இந்நிலையில் 2-வது மனைவி கடந்த புதன்கிழமை விவாகரத்து செய்துள்ளதாக அறிவித்த அவர் , லியாகத் 18 வயதான இளம் பெண்ணை அன்றைய தினமே திருமணம் செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இத் தகவலை அவர் கடந்த 10 ஆம் திகதி தனதுஇன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார்.

ஜப்பான்

## உலகின் மிகப் பழமையான உணவகம்



ஜப்பானில் சுமார் 1300 வருடங்களாக உணவகமொன்று இயங்கி வருவதாக வெளியாகியுள்ள செய்தி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிஷியாமா ஒன்சென் கெய்யுன்கன் (Nishiyama Onsen Keiunkan ) என அழைக்கப்படும் குறித்த உணவகமானது ஒரே குடும்பத்தை சேர்ந்த 52 தலைமுறையினர்களால் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வுணவகமானது ஜப்பானிலுள்ள யமனாஷி பகுதியில் உள்ளதாகவும், அந்நாட்டிற்கு செல்லும் சுற்றுலா பயணிகள் அங்கு செல்லாமல் வரவே மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜப்பான்

பிஸ்கட் தொழிற்சாலையில் தீ

## ஐவர் கருகினர்

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி பிஸ்கட் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 5 தொழிலாளர்கள் உடல் கருகி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானின் ஹோன்சு தீவில் உள்ள துறைமுக நகரமான நிஜிகாடேவில் பிஸ்கட் தொழிற்சாலையிலேயே எதிர்பாராத விதமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தீயணைப்பு வீரர்களின் நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் தீ அணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அந்நாட்டுப் பொலிஸார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி

## பொதுக் கழிப்பறையில் திருடிய ஐவர் கைது

பொதுக் கழிப்பறையில் திருடிய குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்ட வினோத சம்பவம் ஜேர்மனியில் இடம்பெற்றுள்ளது.

ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் பொது கழிவறைகளை பயன்படுத்துவதற்கு 0.50 யூரோக்கள் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

இந்நிலையில் பெர்லினில் கடந்த புதன்கிழமை அன்று பொதுக் கழிப்பறையில் திருடிய குற்றச்சாட்டில் மூவரும், இருவர் கழிவறைகளில் திருடி கொண்டிருக்கும் போதே கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்ட



வர்களிடமிருந்து அதிகளவிலான நாணயங்கள் மற்றும் ஸ்குரூடிரைவர் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட ஐவரிடமும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸார் "கடந்த டிசம்பர் மாதம் மாத்திரமே சுமார் 500 கழிவறைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் புகார்கள் பதிவாகியுள்ளதாகத்" தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின்

குடும்பத்தினரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை

# சிறுவன் கைது

சிறுவனொருவன் தனது குடும்பத்தினரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த சம்பவம் ஸ்பெயினில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்பெயினின் துறைமுக நகரமான அலிகாண்டேவில் இருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள எல்சேச் கிராமத்திலேயே இக் கொடூர சம்பவம் அரங்கேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 வயதான குறித்த சிறுவன் பரீட்சையில் குறைவான மதிப்பெண்




பெற்றது தொடர்பாக அவனது தாய் திட்டியதாகவும், இதனால் கோபமுற்ற சிறுவன் வீட்டில் இருந்த வேட்டையாடும் துப்பாக்கியால் முதலில் தாயையும், பின்னர் தனது 10 வயது சகோதரரையும், தொடர்ந்து தனது தந்தையையும் சுட்டுக் கொலைசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 3 நாட்கள் சடலங்களுடன் வீட்டில் அந்த சிறுவன் தனியாக இருந்துள்ளதாகவும், 3 நாட்களுக்கு பின்னர் அந்த வீட்டிற்கு சென்ற உறவுக்கார பெண்ணிடம் அச்சிறுவன் நடந்த விடயங்களைத் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அவர் கொடுத்த புகாரின் பேரில் பொலிஸார் சடலங்களை கைப்பற்றியதுடன் சிறுவனையும் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# இலங்கையை வென்ற ஆஸி.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில் இலங்கை தோற்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், சிட்னியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். இலங்கையணி சார்பாக வேகப்பந்துவீச்சாளர் நுவான் துஷார அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.




முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஜொஷ் இங்லிஷின் 48 (32) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், துஷ்மந்த சமீர 4-0-30-2, வனிடு ஹஸரங்க 4-0-33-2, மஹேஷ் தீக்‌ஷன 4-0-31-1, சாமிக கருணாரத்ன 4-0-28-0, நுவான் துஷார 4-0-40-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 165 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 73 (53), அணித்தலைவர் தசுன் ஷானகவின் 34 (19), வனிடு ஹஸரங்கவின் 13 (09), துஷ்மந்த சமீரவின் ஆட்டமிழக்காத 4 (1), மஹேஷ் தீக்‌ஷனவின் ஆட்டமிழக்காத 6 (2) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜொஷ் ஹேசில்வூட் 4-0-22-3, அடம் ஸாம்பா 4-0-26-1, பற் கமின்ஸ் 4-0-30-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

அந்தவகையில், போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலை, ஜொஷ் ஹேசில்வூட் வீசிய சுப்பர் ஓவரில் தசுன் ஷானகவும், தினேஷ் சந்திமாலும் களமிறங்கி ஐந்து ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

பதிலுக்கு, ஆறு ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, வனிடு ஹஸரங்க வீசிய ஓவரின் இரண்டாவது, மூன்றாவது பந்துகளில் நான்கு ஓட்டங்களை மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் பெற்ற நிலையில் வென்றது.

இப்போட்டியின் நாயகனாக ஜொஷ் ஹேசில்வூட் தெரிவானார்.

ஐ.பி.எல் ஏலம்:

## 2 கோடிக்கு சமீர ஏலம்




இந்தியாவின் பெங்களூருவில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்ற வீரர்கள் ஏலத்தில், இலங்கையின் நான்கு வீரர்கள் ஏலம் போயிருந்தனர்.

இரண்டு கோடி இந்திய ரூபாய்களுக்கு லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸால் இலங்கையணியின் வேகப்பந்துவீச்சாளர் துஷ்மந்த சமீர வாங்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, 70 இலட்சம் இந்திய ரூபாய்களுக்கு சென்னை சுப்பர் கிங்ஸால் இலங்கையணியின் சுழற்பந்துவீச்சாளர் மஹேஷ் தீக்‌ஷன வாங்கப்பட்டிருந்தார்.

தவிர, கொல்கத்தா நைட் றைடர்ஸால் 50 இலட்சம் இந்திய ரூபாய்களுக்கு இலங்கையணியின் சகலதுறைவீரர் சாமிக கருணாரத்ன வாங்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், இலங்கையணியின் சுழற்பந்துவீச்சாளரான வனிடு ஹஸரங்கவை 10.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வாங்கியிருந்தது.

இவ் ஏலத்தில் அதிகபட்சமாக மும்பை இந்தியன்ஸால் 15.25 கோடி இந்திய ரூபாய்களுக்கு இந்தியாவின் துடுப்பாட்டவீரர் இஷன் கிஷன் வாங்கப்பட்டிருந்தார்.




ஏறாவூரில்

## கிரிக்கெட் சீருடை அறிமுக விழா

■ றம்ஸீன் முஹம்மட்

ஏறாவூர் லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் உத்தியோகபூர்வமான சீருடை அறிமுக விழா அண்மையில் டாக்டர் அஹமட் பரீட் விளையாட்டு மைதானத்தில் லக்கி ஸ்டார் விளையாட்டு கழகத்தின் நிர்வாக தலைவர் ஏ.ஸி.ஏ. சலாம் தலைமையில் இடம்பெற்றது.

லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கான உத்தியோகபூர்வ சீருடைக்கு ஏறாவூர் நகர சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். றியாழ் தனது சொந்த நிதியில் அனுசரணை வழங்கினார்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான செய்யத் அலிஸாஹிர் மௌலானாவும், கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நழீம், நகர சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். றியாழும், சிறப்பு அதிதிகளாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஆர். ஹர்ஷடி சில்வா, சியப்பத்தா எல்.எல்.ஸி நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.எச்.எம். பிரிம்ஷாத் ஆகியோரும், அதிதிகளாக ஏறாவூர் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.ஆர்.எம். ஆஷிக், செயலாளர் ஏ.எம். அஸ்மி, பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு கலந்து கொண்ட பிரதம அதிதி, கௌரவ அதிதிகளுக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது



சுதந்திரக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில்

## சமநிலையில் வட – கிழக்கு போட்டி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்ற மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திரக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் வடக்கு - கிழக்கு மாகாண அணிகளுக்கிடையிலான போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

வட மாகாண அணி 5 போட்டியில் பங்கேற்று 3 போட்டிகளில் வெற்றி பெற்றும் 2 போட்டிகளில் சமநிலை பெற்றும் புள்ளிப்பட்டியலில் முதன் நிலையிலும் , கிழக்கு மாகாண அணி 5 போட்டியில் பங்கேற்று 1 போட்டியில் வெற்றி பெற்றும் நான்கு போட்டிகளில் சமநிலை பெற்றும் புள்ளிப்பட்டியலில் 3வது இடத்திலும் உள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 14 பெப்ரவரி 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.